DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 1035/2025

Prosecution PW 5

Deposition of Witness for Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | மோகன்ராஜ் |
| Father's Name | : | செல்லதுரை |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |
| Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 11.02.2026.

**எதிரி நீதிமன்ற காவலிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டார்.**

**முதல் விசாரணை**

நான் ரெங்கநாதம்பேட்டையில் குடியிருந்து டிரைவர் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலுத்திலுள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது. என்னுடன் பொன்னுராசு என்பவர் கையொப்பம் செய்தார். என்னிடம் காட்டப்படும் பைற்றுதல் மகசரிலுள்ள முதலாவது

கையொப்பம் என்னுடையது. அதிலும் என்னுடன் பொன்னுராசு என்பவர் கையொப்பம் செய்தார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 12.09.2025 ம் தேதி நானும், எனது நண்பர் பொன்னுராசும் இருசக்கர வாகனத்தில் கரூர் டவுன் சென்று கொண்டிருந்தோம். சர்ச்கார்னர் முன்பு போலிசார் வாகன தணிக்கையில் இருந்தனர். எங்களை விசாரித்துக்கொண்டிருந்தபோது, ஆஜர் எதிரி இருசக்கர வாகனத்தில் வந்தவர் போலிசாரை கண்ட உடன் திரும்பி சென்றவரை போலிசார் பிடித்து விசாரித்தனர். ஆஜர் எதிரி எங்கள் முன்னிலையில் விசாரித்தபோது, அவர் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தை திருடி வந்ததாக கூறினார்.

2. அந்த இருசக்கர வாகனத்தின் பதிவெண் ஞாபகமில்லை. அது ஸ்பிளண்டர் வகையை சேர்ந்தது. மேலும், ஆம்னி காரை திருடியதகாவும், அதை மறைத்து வைத்திருக்குட்ம இடத்திற்கு எங்களையும், ஆஜர் எதிரியையும் போலிசார் அழைத்துச் சென்றனர். ரயில்வே ஸ்டேஷன் அருகே மறைத்து வைத்திருந்த ஆம்னியை அடையாளம் காட்டினார். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியான என்னை அழைத்துச் சென்றால் மோட்டார் சைக்கிள் திருடிய இடத்தையும், ஆம்னி வேனை மறைத்து வைத்திருக்கும் இடத்தை அடையாளம் காட்டி ஆம்னியை எடுத்து ஆஜர் செய்வேன். **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எதிரி ஆஜர்படுத்திய இருசக்கர வாகனத்தை கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றினார்கள். **கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர். என்னிடம் காட்டப்படும் போட்டோவிலுள்ள இருசக்கர வாகனத்தைதான் எதிரி ஆஜர்படுத்திய வாகனமாகும்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

அ.சா.1 ஐ எனக்கு தெரியும். வழக்கிற்கு முன்னதாக அ.சா.1 ஐ எனக்கு தெரியாது. எதிரியை போலிசார் எந்த இடத்தில் வைத்து கைது செய்தனர் என்று

எனக்கு தெரியும். 12.09.2025 சுமார் 12.00 யிலிருந்து 01.00 மணிக்குள் போலிசார் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். நான் கைொயப்பம் செய்த தாள்களில் என்ன எழுதியிருந்தது என்று எங்களுக்கு தெரியும். என்னுடன் பொன்ராசு கையொப்பம் செய்தார். பொன்ராசு என்னுடைய நண்பர். எதிரி தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும், போலிசார் அடித்ததால்தான் வாக்குமூலம் கொடுத்தார் என்றாலும் சரியல்ல. போலிசார் எந்த வாகனத்தையும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. அந்த வாகனத்தின் பதிவெண் எனக்கு ஞாபகமில்லை. எதிரி வாகனத்தை என் முன்னதாக ஓட்டி வந்ததை நான் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. இதற்கு முன்பு காவல்துறையினர் வேறு வழக்கிற்காக கையொப்பம் வாங்கினார்களா என்றால் ஆமாம் வேறொரு வழக்கிற்காக வாங்கினார்கள். போலிசார் கேட்டுக் கொண்டதற்கினங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./—எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**